RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22263

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடுகளும் சடங்குகளும்

மா. சங்கரேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி(தன்னாட்சி), (மனோன்மணியம் சுந்தரனர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கோவில்பட்டி-628502, தமிழ்நாடு, இந்தியா

# Worships and Rituals based on Belief in Sangam Literature

**M. Sankareswari [a, *]**

[a] Department of Tamil, G.Venkataswamy Naidu College (Autonomous), (Affiliated to Manonmaniam Sundaranar University), Kovilpatti-628502, Tamil Nadu, India

* Corresponding Author: sankareswari@gvncollege.org

Received: 26-09-2022
Revised: 03-11-2022
Accepted: 19-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Whether there is deity remains to be investigated but a sense of awe was seen among the people of the Sangam period for the sake of belief in deity. Like good-evil, day-night, sun-moon, people believed that if there is a deity, there is also a demon. They said ghosts are the spirits of the dead. They believed that the deity would protect the people and the ghost would bring tribulation to the people. Not only that, people were afraid that if we did something wrong, the gods would do evil to them. Deities like Murugan and Thirumal are mentioned as the deities who protect the people and Sur, Anangu and Suli are mentioned as the deities who can threaten the people. They had great faith in God. From ancient times till now, religious belief has become an inseparable part of people's lives. Rituals and worship arose for the sake of faith.

**Keywords:** Sangam Period, Thirumal, Worship, Rituals

## முன்னுரை

சங்க காலத்தில் தமிழர்கள் அகப்புற வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்களது அகப்புற வாழ்க்கையில் தெய்வம் பற்றிய நம்பிக்கை அதிகம் இருந்தது. தொழில் மற்றும் நிலம் அடிப்படையில் தங்களுக்கு என்று ஒரு தெய்வம் உண்டு என்று கருதினர். அத்தெய்வம் தம்மை பாதுகாப்பதாகவும் நம்பினர். தெய்வம் சார்ந்து எவ்வளவு நம்பிக்கை இருந்ததோ அதைப் போன்று பேய் பற்றிய நம்பிக்கையும் அவர்களிடம் குடி கொண்டிருந்தது. தீயது, பேய் இவற்றிலிருந்து நம்மை காக்கக்கூடியவை தெய்வம் மட்டுமே என்று நம்பினர். அதன்பொருட்டு எந்த ஒரு தீயது நடந்தாலும் தெய்வத்தின்பால் ஏற்பட்டது என்று எண்ணி வழிபட்டனர்.

## சங்க இலக்கியத்தில் தெய்வங்கள்

சங்க இலக்கியத்தில் கடவுள், இறை, அணங்கு, சூர், சூலி போன்ற சொற்கள் தெய்வங்களைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட சொற்களாகும். கோ என்ற சொல்லும் கையாளப்பட்டுள்ளது. கோ என்பது அரசனையும் இறைவனையும் தலைவனையும் குறிக்கின்றது. இந்த உலக மக்களை இறைவன் எவ்வாறு காப்பாற்றுகிறனோ அதைப்போல அரசனும் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் கடமையுள்ளவன். அதனால்தான் இவ்விருவருக்கும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க காலத்தில் நில

அடிப்படையில் தெய்வங்கள் இருந்தன. குறிஞ்சிக்கு முருகன், முல்லைக்கு திருமால், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன், பாலைக்கு கொற்றவை என்பதாகும். இத்தெய்வங்கள் எல்லாம் தொழில் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலத்திலும் தொழில் சிறந்திருந்தால் மக்கள் வளமாக வாழ்வர். அவர்கள் தொழில் சிறக்க இத்தெய்வங்கள் காக்கின்றன என்று நம்பி வழிபட்டனர்.

## தெய்வங்கள் தாங்குமிடம்

இறைவன், அரசன் உறையுமிடத்தை 'கோயில்' என்று கூறுவர். கோயிலைத் தவிர மரம், நீர்நிலைகள், மன்றம், ஆற்றிடைக்குறை போன்ற இடங்களிலும் தெய்வங்கள் உறைந்திருப்பதாக மக்கள் நம்பினர். வேப்பமரம், கடம்ப மரம் - முருகன், ஆலமரம் - சிவபெருமான் போன்ற மரங்களில் உறைவதாகக் கூறினர். முருகனுக்குரிய மாலை கடம்ப மாலையாகும். ஆதலால் புதிதாக மலர்ந்த கடம்ப மரத்தில் முருகன் உறைந்திருப்பான் என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது. மேலும் ஆற்றிடைக்குறையில் முருகன் உறைவதாகவும் மக்கள் கருதினர். அதன்பொருட்டு வெறியாட்டு நிகழ்த்தக்கூடிய இடமாக ஆற்றிடைக்குறை விளங்குகிறது. முருகனுக்கு கொண்டாடப்படும் விழா 'பங்குனி உத்திர விழா' ஆகும். இவ்விழா அன்று ஆற்றிடைக்குறையில் மக்கள் ஒன்று கூடி உணவு சமைத்து உண்டனர் என்பதை,

"உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்

பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்,

வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்

தீஇல் அடுப்பின் அரங்கம் போல"

என்ற அடிகள் வழி அறியலாம் (Venkatasamy Nattar, 2012).

## வழிபாடு தோன்றக் காரணம்

மனிதன் முதலில் இயற்கையை வழிபட ஆரம்பித்தான். அதற்குக்காரணம் அவனுக்குள்ளிருந்த பயம் மட்டுமில்லாமல் அப்பொருளின் மீது அவன் கொண்ட நம்பிக்கையும் ஒருகாரணம். "உயிரற்ற இயற்கைப் பொருள்களில் உயிர்ப்புத்தன்மை இருக்கிறது. அவற்றுள் பெரும் ஆற்றல் உள்ளது என்று எண்ணினர். அதனாலேயே மேக்ஸ் முல்லர் தொன்மை மக்களின் சிந்தனை குறைபாடுடைய மனத்தால் விளைந்தது என்பர்" (பக்தவச்சல பாரதி, மானுடவியல் கோட்பாடுகள், ப.286). இயற்கை நிகழ்வுகள் மூலம் அழிவு ஏற்படக்கூடும். அவ்அழிவுகளிலிருந்து தன்னை காத்துக்கொள்ள மனிதன் அவ்வியற்கையின் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்தான். அந்த நம்பிக்கைதான் அவனை கைகூப்பி தொழ வைத்து, வழிபட காரணமாக அமைந்தது எனலாம்.

## மாலைநேர வழிபாடு

மாலை நேர வழிபாடு வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். முல்லைப்பாட்டில் மாலைநேரத்தில் முதுபெண்டிர் கைதொழுது நின்று வழிபட்ட முறையைக் காணமுடிகின்றது. நாம் இறைவனிடம் ஏதேனும் வேண்டிக் கொள்ளும் நேரத்தில் சில நிகழ்வுகள் நடந்தால் அது இறைவனால் நடந்தது என்று கூறுவர். அந்நிகழ்வை வைத்து நன்மை விளையுமா அல்லது தீமை விளையுமோ என்று கூறிவிடுவர். அதுமட்டுமின்றி நாம் வேண்டி கொண்ட செயலுக்கு இறைவன் அருளினான் என்றும் நம்பினர். அதனை நற்சொல் கேட்டல் (விரிச்சி கேட்டல்), நிமித்தம் பார்த்தல் என்று கூறுவர். தலைவன் வினை முடித்து விரைவில் வந்து தலைவியின் துன்பத்தைப் போக்க வேண்டும் என்று பெண்டிர் கைதொழுது வேண்டி நிற்கும் போது ஆயர் மகள் கன்றிடம் உன் தாய் விரைந்து வந்துவிடும் என்று கூறுவதை நற்சொல்லாகக் கேட்டனர். இதனை,

"அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,

பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப,

ஆய்மகள்

இன்னே வருகுவர், தாயர்" என்போள்

நன்னர் நன்மொழி கேட்டனம்" (முல்லை.10 - 17)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

## நடுகல் வழிபாடு

சங்க காலத்தில் நடுகல் வழிபாடு வழக்கத்தில் இருந்தது. நடுகல் என்பது போரில் இறந்த வீரர்களுக்கு கல் நட்டி வழிபாடு செய்வதாகும். இது சங்க காலத்தில் மரபாக இருந்து வந்துள்ளது. ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்களிடமிருந்து ஆநிரையை மீட்டு அவர்களோடு போரிட்டு கரந்தை வீரர்கள் இறந்தனர். இறந்துபட்ட வீரர்களுக்கு நடுகல் நட்டி வழிபாடு செய்ததை,

"ஏறுடை இனநிரை பெயர, பெயராது,

செறிசுரை வெள் வேல் மழவர்த் தாங்கிய

தறுக ணாளர் நல்இசை நிறுமார்,

பிடிமமர்ந் தன்ன குறும்பொறை மருங்கின்

நட்ட போலும் நடாஅ நெடுங்கல்

அகல் இடம் குயின்ற பல்பெயர் மண்ணி" (Venkatasamy Nattar, 2012)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இன்றும் நடுகல் வழிபாடு பல்வேறு முறைகளில் வளர்ச்சி பெற்று மாறுதல் அடைந்துள்ளதை தவிர வழக்கத்தில் உள்ள ஒன்றாகவே உள்ளது.

## பலியிட்டு வழிபடுதல்

தான் செய்யும் செயல், தொழில், எண்ணம் நிறைவேறவில்லையென்றால் தெய்வக்குற்றமாகக் கருதும் பழக்கம் பண்டைக்காலம் தொட்டு இக்காலம் வரை மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுள் ஒன்றாகும். கானவன் ஒருவன் வேட்டைக்குச் சென்றான். அப்போது ஆமான் மீது அம்பு எய்தினான். அந்த அம்பு குறி தவறி வீழ்ந்தது. தான் மேற்கொண்ட வேட்டைத்தொழிலில் தோல்வி ஏற்பட்டது தெய்வத்தின் கோபத்தினால்தான் என்று நம்பினான். தெய்வத்தின் கோபத்தைத் தணிக்கும் பொருட்டு பரிகாரம் செய்ய வேண்டுமென்று நினைத்தான். தெய்வத்திற்கு பலியிடுதல் தெய்வச் சடங்காக மக்கள் நம்பினான். உயிர்ப்பலியிட்டால் பலியை ஏற்று மலையில் மழைபொழியும். அதன் பொருட்டு மலையில் உறைந்திருக்கும் தெய்வத்தின் கோபம் தணியும் என்று நம்பினான். மலைத்தெய்வத்தை வழிபடும் பொருட்டு தன் சுற்றத்தோடு சேர்ந்து வந்து அம்மலைக்குப் பலியை இட்டு வணங்கினான். இதனை,

"அமர்க் கண் ஆமான் அருநிறம் முள்காது,

பணைத்த பகழில் போக்கு நினைந்து கானவன்,

அணங்கொடு நின்றது மலை வான் கொள்க' எனக்

கவுள் ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்த

கிளையொடு மகிழும் குன்ற நாடன்" (Swaminatha Iyer, 1986)

"மலைவான் கொள்கென உயிர்பலி தூஉய்,

மாரி யான்று மழை மேக்குயர் கெனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்”

என்ற அடிகள் விளக்குகின்றன (Swaminatha Iyer, 2014).

பசுக்கூட்டங்களைக் கவர்தல் வெட்சித்திணையாகும். அவ்வாறு கவர்ந்து வரும் போது, பசுக்கூட்டத்திற்குரிய கரந்தை வீரர்கள் மீட்க வருவர். அவர்களை வெட்சிவீரர்கள் வெற்றிக்கொண்டு விரட்டியடித்தனர். அதன்பின் தெய்வம் வாழும் பருத்த அடிமரத்தைக் கொண்ட வேப்பமரத்தடியில் கவர்ந்து கொண்டு வந்த ஆக்களுள் கொழுவிய ஆவினைக் கொன்று, அதன் புலாலைச் சமைத்து உண்டனர்.

“வயவாள் எறிந்து, வில்லின் நீக்கி,

பயம்நிரை தழீஇய கடுங்கண் மழவர்,

அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தென,

தெய்வம் சேர்ந்த பராரை வேம்பில்

கொழுப்புஆ எறிந்து குருதிதூஉய்,

புலவுப்புழுங்கு உண்ட வான்கண் அகல்துறை” (Venkatasamy Nattar, 2012)

என்ற அடிகள் வழி அறியலாம். இன்றைய காலத்திலும் சில கோயில்களில் உயிர்ப்பலியிட்டு புலால் சமைத்து சாப்பிடும் பழக்கம் வழக்கத்தில் உள்ளது. ஆனால் சிவன், திருமால், முருகன், விநாயகர் கோவிலில் அப்பழக்கம் வழக்கத்தில் இல்லை. சங்க காலத்தில் வெறியாட்டின் போது முருகனுக்கு மறியை பலியிடும் வழக்கம் உள்ளது. ஆனால் இன்றைய காலத்தில் முருகன் கோயிலில் பலியிடும் பழக்கம் வழக்கத்தில் இல்லை. மாரியம்மன், காளியம்மன், கருப்பசாமி, சுடலைமாடசாமி போன்ற தெய்வங்களுக்கு பலியிட்டு வழிபடும் பழக்கம் மட்டுமே உள்ளது.

## படையல் பற்றிய நம்பிக்கை

தெய்வத்திற்காக படைக்கப்பட்டும் உணவுப்பொருளைப் படையல் என்று கூறுவர். இப்படையலை மனிதர்களோ பிற உயிரினங்களோ உண்ணக்கூடாது. அவ்வாறு மீறி உண்டால் அவர்கள் துன்பத்தை அடைவர் என்று மக்கள் நம்பினர். இது மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் இவற்றிற்கும் பொருந்தும். தெய்வத்திற்குப் படைக்கப்பட்ட தினைக் கதிரை அறிவில்லாமல் மயில் ஒன்று உண்டது. அதனால் அம்மயில் தெய்வத்தின் கோபத்திற்கு ஆளாகி அவற்றின் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. இதனை,

“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்

குடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்

அறியாது உண்ட மஞ்ஞை, ஆடுமகள்

வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்” (Parimanam & Balasubramaniyam, 2004)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. வீட்டில் உணவு சமைத்தால் முதலில் அவற்றை தெய்வத்திற்கு வைத்து வழிபடுவது மரபாகும்.

## கந்து பற்றிய நம்பிக்கை

கந்து என்பது பலியிடுவதற்குரிய தூணாகும். பலித் தூணில் ஆண் மரை தன் தினவு தீர உராய்ந்தது. அதனால் அத்தூண் பாழ்பட்டு அவ்வூரில் மழைபெய்யாது பொய்த்தது. மழை பொய்த்தமையால் மக்கள் நாள்தோறும் இறைவனுக்கு இடும் விடியற்காலை பலியை இடாது மறந்தனர். அதனால் பலிபீடம் பொலிவின்றி பாழ்பட்டுக் காணப்பட்டது. இதனை,

"மரைஎறு சொறிந்த மாத்தாட் கந்தின்

சுரைஇவர் பொதிளில் அம்குடிச் சீறூர்

நாட்பலி மறந்த நரைக்கண் இட்டிகை

புரிசை மூழ்கிய பொரிஅரை ஆலத்து" (Venkatasamy Nattar, 2012)

என்ற அடிகள் விளக்குகின்றன.

## நறும்புகையிடுதல்

வீட்டில் நறும்புகையிட்டால் தீயது விலகும் என்று மக்கள் நம்பினர். நறும்புகையிடுதல் என்பது தீயில் நறுமணமிக்க பொருட்களைப் புகைப்பதாகும். இன்றைய காலத்தில் வேப்பிலை, மஞ்சள், வசம்பு, சாம்பிராணி போன்ற பொருட்களை புகைப்பர். சங்க காலத்தில் வெண்சிறு கடுகினையும் நறும்புகையில் இட்டுள்ளனர். தீய சக்தி விலகும் என்பது பண்டைத்தமிழரின் நம்பிக்கையாகும். இதனை,

"நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ

காக்கம் வம்மோ - காதல் அம்தோழி!" (Swaminatha Iyer, 2014)

"வேம்பு சினை ஒடிப்பவும், காஞ்சி பாடவும்,

நெய்யுடைக் கையர் ஐயவி புகைப்பவும்,

எல்லா மனையும் கல்லென்றவ்வே" (Swaminatha Iyer, 2014)

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும் அறியவில் முறைப்படி நறும்புகையிடுவதால் காற்றில் பரவியுள்ள கண்ணுக்குத் தெரியாத தீய நுண்ணுயிரிகள் அழிந்துவிடும் என்பது உண்மையாகும்.

## வீட்டில் வேம்பு தழை சொருகுதல்

மக்களிடையே தெய்வம் பற்றிய நம்பிக்கை எவ்வளவு புறவாழ்க்கையில் பண்டைத்தமிழர் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். போரில் விழுப்புண் பெறுவதை வாழ்வின் பேறாகக் கருதினர். போரில் புண்பட்டவர்களை வீட்டிற்கு அழைத்து வந்துள்ளனர். புண்பட்டவர்களை பேய் அண்டும் என்று நம்பினர். அதனால் அவர்களின் வீட்டில் இரவ மரத்தின் தழையையும் வேப்ப மரத்தின் தழையையும் செருகினர். இதனை,

"தீம் கனி இரவமொடு வேம்பு மனைச் செரிஇ

வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க,

கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி,

ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி" (Swaminatha Iyer, 2014)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. இன்றைய காலத்திலும் அம்மை வந்த வீடுகளில் வேப்பிலை செருகும் பழக்கம் உள்ளது.

## வெண்சிறுகடுகினை தூவுதல்

போர்க்களத்தில் வேந்தனுக்கு வந்த துன்பத்தைத் தான் ஏற்றுப் புண்பட்டான் வீரன் ஒருவன். புண்கள் ஏற்பட்டால் இரத்த நாற்றத்திற்கு பேய்கள் அவனைத் தாக்கும் என்பது பண்டைத்தமிழரின் நம்பிக்கையாகும். அவனை பேய் அண்டாதவாறு வெண்சிறுகடுகினை வீடு முழுவதும் தூவினர். அதுமமட்டுமின்றி பேய் உள்ளே புகாதவாறு காத்தற்பொருட்டு வெண்சிறு கடுகினை அப்புதல்

அக்காலத்து வழக்கமாகும். இதனை (திருமுருகு.248), (நெடுநல்,86), (நற்,370) போன்ற இலக்கியங்களின் அடிகள் நமக்கு புலப்படுத்துகின்றன.

## விழாக்கள்

சங்க காலத்தில் பல்வேறு தெய்வங்களுக்கு விழாக்கள் கொண்டாடப்பட்டன. அவை கார்த்திகை திருவிழா, பங்குனி முயக்கம், திருவாதிரை, எழுநாள் அந்தி விழா, ஓண நாள், ஆடிபெருக்கு என்பதாகும். கார்த்திகை விழா, பங்குனி முயக்கம் முருகன் தெய்வத்திற்காகவும் திருவாதிரை சிவபெருமானுக்காகவும் ஓண நாள் திருமாலுக்கும் நிகழ்த்தப்பட்டது. விழாக்கள் கொண்டாடுவதின் வெளிப்பாடு மக்களின் மகிழ்ச்சியும் ஒன்றாகும். அதுமட்டுமின்றி மக்கள் ஒற்றுமையும் இவ்விழாவில் காணலாம். பல்வேறு கூத்துக்கள் நடைபெறும். இதன்வழி கூத்தர்கள், பாணர்கள்கள் தங்களின் கலைத்திறமையை வெளிக்கொணருவர். அவர்களுக்கு வாழ்வாதாரங்களும் கிட்டும்.

## முடிவுரை

வழிபாடு என்பது மக்களை நல்வழிபடுத்தும் நோக்கத்துடனும் அவர்கள் பயபக்தி உணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவும் மக்களிடையே தெய்வ நம்பிக்கை மேலோங்கி திகழ்ந்தது. மேலும் தெய்வங்கள் பொருட்டு நடத்தப்படும் விழாக்கள் என்பது மக்களின் ஒற்றுமை, கலைஞர்கள் கலைகளை நிலைநாட்டவும், அவர்கள் வாழ்வு மேம்பட்டு விளங்கவும் கொண்டாடப்பட்டது என்பதும் தெரிய வருகின்றது.

## References

Jeyabal, R. (2011) Agananooru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Swaminatha Iyer, U.V (1986) Nattrinai Moolamum Uraiyum, U.Ve.Sa. Library, Chennai, India.

Swaminatha Iyer, U.V. (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M., (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License